## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25.6.2015 அன்று தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 12 கோடியே 15 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடங்கள், மண்டல இணை இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள், பணிமனைகள், ஆய்வகக் கட்டடம், பாதுகாப்பு பயிற்சி மையக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 31 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான துயிற்கூடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

வேலை நாடுநர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்ய வருவோருக்கு போதிய வசதிகளை ஏற்படுத்தித் தருதல், வேலைவாய்ப்பற்றோருக்கு உதவித் தொகை வழங்குதல், தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் பாதுகாப்பினை மேம்படுத்தி, அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் 9,561 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன் கூடிய அலுவலக அறைகள், வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்ய வரும் பதிவுதாரர்களுக்கான பதிவு செய்யும் அறைகள், பதிவாளர்கள் காத்திருக்கும் அறைகள், கூட்ட அரங்கு, வாகன நிறுத்துமிடம், கழிப்பறை உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், நாகர்கோவில், சிவகங்கை, பெரம்பலூர், சேலம் ஆகிய இடங்களில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடங்கள்;

36 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மதுரை மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகக் கட்டடம்; 52 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மதுரை மண்டல இணை இயக்குநர் (பயிற்சி) அலுவலகக் கட்டடம்; 52 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர் (பயிற்சி) அலுவலகக் கட்டடம்;

தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கப்பல் இயந்திர பொருத்துநர் தொழிற் பிரிவிற்கான பணிமனைகள்; விருதுநகர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பற்றவைப்பவர் தொழிற் பிரிவிற்கான பணிமனைக் கட்டடம்;

மதுரையில், 1 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகம்; கோயம்புத்தூரில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சட்டமுறை எடையளவு ஆய்வகக் கட்டடம்; விருதுநகர் மாவட்டம் – சிவகாசியில் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பட்டாசு தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு பயிற்சி மையக் கட்டடம்;

என மொத்தம் 13 கோடியே 65 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் சிரமங்களைப் போக்கிடும் வகையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளிலும், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலும் மொத்தம் 7,000 தொழிலாளர்கள் தங்கும் வகையில் 9 இடங்களில் துயிற்கூடங்கள் (Dormitories) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் பொதுப்பணித் துறை மூலம் கட்டப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டம் – தையூர் மற்றும் எழிச்சூரில், 31 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான துயிற்கூடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் அடிக்கல் நாட்டியும், திறந்தும் வைத்த திட்டங்களின் மொத்த மதிப்பு 45 கோடியே 31 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில்கள் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு ப.மோகன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜ், தலைமைச் செயலாளர் திரு கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளர் (பொறுப்பு) திரு குமார் ஜயந்த், இ.ஆ.ப., தொழிலாளர் நல ஆணையர் திருமதி பி. அமுதா, இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திரு சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 27.6.2015**